**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.16/2026 - PW-1**

| | |
|---|---|
| Name | திருமதி.நதியா |
| Husband/Father Name | நிரேஷ் |
| Village /Area | அம்மனூர் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | இல்லதரசி |
| Age | 34 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 01.06.2026.

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்த திலீப்குமார் எனது தம்பி ஆவார். நான் என் கணவருடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டு என் அம்மா வீட்டில் வசித்து வருகிறேன். என் தம்பி திலீப்குமாருக்கும் அவருடைய மனைவி சோபா(எ)செல்வி என்பருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு என் தம்பி மனைவி சோபா(எ)செல்வி அரக்கோணம் அம்பேத்கர் நகரில் அவர் தாய் வீட்டில் வசித்து வருகிறார். மேலும் எனது தம்பி திலீப்குமார் அவர் மனைவியுடன் இருக்கும் குழந்தைகளை அம்பேத்கர் நகரிலிருந்து சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் எங்கள் வீட்டுக்கு அழைத்து வந்து மறுபடியும் அவருடைய மாமியார் வீட்டுக்கு குழந்தைகளை திரும்பி விட்டுவிட்டு வருவது வழக்கம். 01.09.2025 அன்று காலை 7.30 மணிக்கு திங்கள் கிழமை குழந்தைகளை அவருடைய மனைவியிடத்தில் மாமியார் வீட்டில் விட்டுவிட்டு வருவதற்கு சென்றவர் மறுபடியும் வீட்டுக்கு வரவில்லை. இது குறித்து நான் என் தம்பி மனைவி சோபாவிடம் போன் செய்து கேட்டதற்கு அவர் குழந்தைகளை என்னிடம் எங்கள் வீட்டில் விட்டுவிட்டு கிளம்பிவிட்டார் என்று கூறினார். மாலை சுமார் 6.30 மணியளவில் என் தம்பி நண்பர் பாபு என்பவரை அழைத்து கொண்டு SR Gate, வெங்கடேசபுரம், அரக்கோணம் ரயில் நிலையம், கிருஷ்ணன்பேட்டை ஆகிய இடங்களில் தேடி பார்த்தோம். பிறகு 04.09.2025 அன்று அரக்கோணம் நகர காவல் நிலையத்தில் என் தம்பி திலீப்குமார் காணவில்லை என்று புகார் கொடுத்தேன். காவல் நிலையத்தில் என் தம்பி

காணவில்லை என்று வழக்கு பதிவு செய்து பிறகு 05.09.2025 அன்று ஓச்சலம் அருகேயுள்ள அருணாச்சலம், ராம்பிரபு என்பவர்களது கிணற்றில் ஒரு பிரேதம் இருப்பதாக போலீசார் கூறினார்கள். பிறகு நானும் என் அப்பா, அம்மா மற்றும் என் அண்ணன் உறவினர்களுடன் சென்று கிணற்றில் இருந்த பிரேதத்தை பார்த்து அடையாளம் காண்பித்தோம். அந்த உடல் என் தம்பி உடையது தான் என்று ஊர்ஜிதம் செய்தோம். இறந்த என் தம்பி திலீப்குமாரின் வலது கையில் தீப்பொறியை பச்சை குத்தியும் இடது கையில் 'S' என்று அவருடைய மனைவியுடைய பெயரை பச்சை குத்தி இருந்தார். அந்த அடையாளங்களை வைத்து தான் என் தம்பி என்பதை உறுதிப்படுத்தினோம். இறந்த என் தம்பியின் இடுப்பில் ஒரு காணி கல்லும் தொடையில் ஒரு காணி கல்லும் தேங்காய் நார் கயிற்றில் கட்டப்பட்டு அரை அடி தண்ணீரில் சேரும் சகதியுமாக எனது தம்பியின் உடல் கிடந்தது. என் தம்பியின் முகம் சிதைந்து இருந்தது. என் தம்பி கருப்பு கலர் முழுக்கை சட்டை அணிந்திருந்தார், சிமென்ட் நிற பேன்ட் அணிந்திருந்தார். Grey கலர் shoe அணிந்திருந்தார். அவர் கழுத்தில் கருப்பு நிற கயிற்றில் சிறிய மோதிரம் கட்டி தொங்கவிட்டிருந்தார். பிறகு 09.09.2025 அன்று அரக்கோணம் நகர காவல் நிலையத்தில் என் தம்பியை கொலை செய்தவரை பிடித்து விட்டதாக கூறினார்கள் நாங்கள் சென்று அவரை பார்த்தோம். எதிரி தான் எனது தம்பியை அவரது ஆட்டோவில் சம்பவ தினத்தன்று அழைத்து சென்றதாக CCTV யில் பதிவாகி இருந்தது என்று தெரிந்து கொண்டோம். ஆஜர் எதிரி தான் என் தம்பியை அழைத்து சென்று ஏதோ செய்து உள்ளார். என் தம்பிக்கு 2 குழந்தைகள் உள்ளனர். மகள் 6 ம் வகுப்பும் மகன் 1ம் வகுப்பும் படித்து வருகிறார்கள். எனது தம்பிக்கும் ஆஜர் எதிரிக்கும் ஆட்டோ ஓட்டுவது சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்ததால் எதிரி என் தம்பியை அவரது சொந்த ஊரான ஓச்சலம் கிராமத்தில் கொலை செய்து விட்டார். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகாரிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகாரை நான் தான் கொடுத்தேன். அந்த புகார் **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் வழக்கு சொத்தான காணி கற்களால் தான் எனது தம்பியுடைய உடலுடன் கட்டப்பட்டு இருந்தது. அவைகள் முறையே **சா.பொ.1 மற்றும் சா.பொ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் தேங்காய் நார் கயிற்றால் தான் என் தம்பியின் உடலுடன் காணி கற்கள் கட்டபட்டிருந்தது. அது **சா.பொ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் கருப்பு, மஞ்சள் மற்றும் Grey நிறம் கலந்த shoe–களை தான் எனது தம்பி அணிந்திருந்தார். அது **சா.பொ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் சாம்பல் நிற பேன்ட்டை தான் என் தம்பி அணிந்திருந்தார். அது **சா.பொ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் கருப்பு நிற முழுக்கை சட்டையை தான் என் தம்பி

அணிந்திருந்தார். அது **சா.பொ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் Samsung Galaxy phone என் தம்பிக்கு சொந்தமானது தான். அதன் நிறம் வெளீர் மஞ்சள் நிறம் கொண்டது. அது **சா.பொ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் ஆகியும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.06.01 17:22:16 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.